அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 290/2007

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.சா.1 | 06.04.2026 |
| பெயர் தர்மேஸ்வரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>மனுவின் பெயரில் திருப்பி அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

1. வாதி 2007 வருடத்தில் வழக்கு தாக்கல் செய்தார். நான் அதற்கு பிறகு ஒரு வழக்கு தாக்கல் செய்தேன். வாதி பூமிபூசை செய்யும்போது நான் வந்து தடுத்தேன் என்றால் சரியல்ல. வாதிவழக்கு தாக்கல் செய்யும்போது தாவா சொத்தின் சர்வே எண் 269/2 விஸ்திரணம் 8720 சதுரஅடி என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். என்பெயரில் இன்றைய தேதிவரை தாவா சொத்து சம்மந்தமாக ஆவணம் உள்ளதா என்றால் என்அப்பா பெயரில் உள்ளது. துரைசாமி முதலியார் எனது தந்தை என்பதை காட்டுவதற்கான ஆவணம் , வாரிசு சான்றிதழ் , இறப்பு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. துரைசாமி முதலியாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 10 குழந்தைகள். 5 ஆண்பிள்ளைகள் 5 பெண்பிள்ளைகள். நான் தாக்கல் செய்த அ.வ.எண் 305/2007 வழக்கில் மேற்கூறியவர்களை வழக்கில் வாரிசுகளாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. லோகநாதமுதலியார் எனது தாத்தா இல்லை என்றால் சரிதான். பாங்காளிமுறையில் பெரியப்பா ஆவார். எனது பதில்உரையில் லோகநாதமுதலியார் என்பவரை வாதியின் தாத்தா என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்விகமாக எனது தந்தைக்கு கிடைத்தது 2 பாகங்கள் கிரையம் மூலமாக எனது தந்தை பெற்றார்.

3. அவ்வாறு எனது தந்தைக்கு கிரையம் மூலமாகவும் பூர்வீகமுலமாகவும் கிடைத்தது என்பதை காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. லோகநாதமுதலியார் எனது தந்தை துரைசாமி முதலியாருக்கு தாவா சொத்தில் ஒருபாகத்தை கிரையம் கொடுத்தார் என்பதை காட்டும் ஆவணம் தான் பி.சா.ஆ 2 ஆவணமா என்றால் ஆமாம். எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ள விவரத்தை நிருபிக்க நான் துரைசாமி முதலியார் மகன் என்பதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். லோகநாதமுதலியார் 1960 காலத்தில் இறந்தார். 1960 முதல் 2007 வரை தாவா சொத்தில் எதுவும் செய்யவில்லையா என்றால் வைக்கப்போர் மற்றும் மாடுசாணம் வைக்கப்பட்டு இருந்தது. நத்தம் நிலமாக பயன்படுத்தபட்டதா என்றால் ஆமாம். நத்தம் நிலத்திற்கு வரிவிதிக்கப்படும் என்றால் வீடுஇருந்தால் தான் விதிக்கப்படும்.

4. நத்தம் நிலமாக இருந்தால் சிட்டா, அடங்கல் இருக்கும் என்றால் இல்லை. 1370 பசலிவருடத்தின் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சிட்டா அடங்கல்

கொடுத்திருந்தால் கிராமநிர்வாக அலுவலர் சொத்து எந்தவகைப்பட்டது என்பதை பிரித்து குறிப்பிட்டிருப்பார் என்றால் சொத்தில் வீடுகட்டி குடியிருந்துவந்தோம். அதற்கான வீட்டு ரசீது தாக்கல் செய்துள்ளேன். அந்த வீட்டை யார் கட்டினார் என்றால் என் தந்தை கட்டினார். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ 5 வீட்டுரசீதில் வீட்டு எண் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். எனவே பி.சா.ஆ 5 ஆவணத்தை வைத்து தாவா சொத்தில் தான் வீடுஉள்ளது என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

5. பி.சா.ஆ 5 ஆவணத்தில் ரசீது எண் 050548 ல் வீட்டு எண் 12/3 துரைசாமி முதலியார் என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 31.03.2002 தேதியிட்ட ரசீதில் அதில் கதவு எண் 29/4 என்பெயரில் உள்ளது என்றால் சரிதான். 14.02.2007 தேதியிட்ட ரசீதில் கதவு எண் 29 என்று மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ 5 ஆவணத்தில் 3 கதவு எண்கள் உள்ளது என்றால் 3 வீடும் தனிதனியாக உள்ளது. 31.03.2002 தேதியிட்ட ரசீதில் 2000 முதல் 2002 வரை மற்றும் அடுத்த ரசீதில் 2005 முதல் 2007 வரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிடைத்தவரைக்கும் கொடுத்துள்ளேன். எவ்வாறு துரைசாமி முதலியார் பெயரில் இருந்து என்பெயருக்கு வரிரசீது கொடுக்கப்பட்டது என்றால் புதியவீடு கட்டியபோது என்பெயரில் கொடுத்துவிட்டார்கள். என்வழக்கில் புதுவீடுகட்டியதாக சொல்லவில்லை என்றாலும் என்தந்தை வீட்டில் தான் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றாலும் என் அப்பா இருக்கும்போதே கட்டியவீடுதான்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)